என்று கூறி மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், பேரவை முன்னவர் அவர்களுக்கும், பாராட்டிப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர்கள் அனைவருக்கும் இந்த அவையில் இருக்கின்ற மாண்பு மிகு உறுப்பினர் பெருமக்களுக்கும், குறிப்பாக, தொடர்ந்து எனக்கு ஒத்துழைப்பு நல்கப் போகிற எதிர்க்கட்சிப் பெருமக்க ளுக்கும், நமக்கு எல்லாம் பாலமாக விளங்கி இந்த நாட்டு மக்க ளுக்கு நம்மைப் பற்றி நன்கு அறிமுகப்படுத்தப் போகிற பத்திரிகை யாளர்களுக்கும், இந்தச் சட்டப் பேரவையைச் சிறப்பாக நடத்தத் துணை செய்யப்போகின்ற இந்தச் சட்டப் பேரவைச் செயலகத் திற்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 11-20)

5. அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் களிடமிருந்து வினாக்களுக்கான அறிவிப்புகள் வந்துள்ளவை அனுமதிக்கப்பட்டுத் துறைகளுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. விடைகள் வருவதற்கு காலதாமதமாகும். எனவே, 13-2-1989 ஆம் நாள் முதல் சில நாட்களுக்கு வினாக்கள்-விடைகள் நேரம் இருக்காது. ஏற்கெனவே அறிவித்தபடி 11-2-1989 சனிக்கிழமை காலை 11.00 மணிக்குப் பேரவையில் ஆளுநர் அவர்கள் உரை நிகழ்த்துவார்கள் என்பதை நினைவுப்படுத்துகிறேன்.

9-2-1989, 10-2-1989 ஆகிய இரு நாட்களிலும் பேரவைக் கூட்டம் இல்லை.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 13-2-1989 திங்கட்கிழமை காலை 10-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை காலை 11-22 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS